# திருவள்ளுவர் சுட்டிய உணர்வுகள்

தெ .ரேவதி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, சென்னை -600040.
revar55@yahoo.com

12

**ஆய்வு சுருக்கம்**

தொல்காப்பியர் கூறும் உணர்ச்சிகளுக்கும் வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடும் உணர்வுக்கும் ஒப்புமை காணப்படுகிறது. தொல்காப்பியர் சுட்டிய எட்டு மெய்ப்பாடுகளில் நகை, அழுகை, வறுமை, நட்பு, காதல் ஆகிய உணர்வுகள் குறித்து வள்ளுவர் கூறியிருப்பதை ஆராய்ந்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

திருவள்ளுவர் சுட்டும் உணர்வுகள் மனித வாழ்விற்கு எவ்வாறு பொருந்துகின்றது என்பதையும் தொல்காப்பியர் கூறும் உணர்ச்சிக்கும் திருவள்ளுவர் சுட்டும் உணர்வையும் ஆராயும் நோக்கில் பிற ஆசிரியர்கள் கூறும் எடுத்துக்காட்டையும் மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** பிம்பம், தாழ்ப்பாள், ஜகம், உறுபசி, அஸ்திவாரம்

**முன்னுரை**

திருக்குறள் உலகப் பொதுமறை என்பது அனைவரும் அறிந்ததே. அது ஏன் உலகப் பொதுமறையாகக் கூறப்படுகிறது எனில் சாதி சமயம் கடந்து “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” கூறும் அறிவுரையாக அமைவது முப்பால். குறளில் கூறாத செய்திகளே இல்லை எனலாம். திருக்குறளில் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து கருத்துகளும் உணர்வுகளும் இருப்பினும் இக்கட்டுரையில் திருவள்ளுவர் சுட்டிக்காட்டிய உணர்வுகளைத் தொல்காப்பியரின் மெய்ப்பாடுகளின் நோக்கில் காணலாம்.

**உணர்வு**

உணர்வு என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் மீது வலுவான உணர்வுகளைக் கொண்டிருப்பது அல்லது உடலியல் நடந்த மாற்றங்களுடன் உடலில் ஏற்படும் ஒரு நிலை என்பதே உணர்வின் வரையறை எனக் குறிப்பிடுகிறார்.[1] உணர்வு இல்லாத உயிரினமே இல்லை எனலாம். இந்த உலகில் பிம்பத்தை வள்ளுவர் எங்ஙனம் தனது குறட்பாக்களில்

வெளிப்படுத்தியுள்ளார் என்பதைக் குறித்து ஆய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**திருவள்ளுவர் காட்டும் உணர்வுகள்**

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப (தொல்காப்பியம் நூற்பா 247)**

மனிதனின் மொத்த உணர்வுகளையும் எட்டு வகையில் அடக்குகிறார் தமிழ் மகனார் தொல்காப்பியர். முழு உணர்ச்சி நடக்கவே மனித வாழ்க்கை இயங்குகின்றது. மழலைப் பருவம் முதல் மரணம் வரை மனிதனின் அனைத்து செயல்களுக்கும் உணர்ச்சி முக்கிய பங்கு ஆற்றுகிறது. இதில் தொல்காப்பியர் கூறும் உணர்ச்சிகளுக்கும் வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடும் உணர்வுக்கும் ஒப்புமை காணப்படுகிறது வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர் வாழ்வியலை விவரித்துக் காட்டியவர் வள்ளுவர். எட்டு மெய்ப்பாட்டில் முதலாவதாகக் காணப்படும் நகை(சிரிப்பு) என்று எடுத்துக்கொள்ள எள்ளல் இளமை பேதமை மடமை எனும் நான்கு நிலைப்பாட்டின் கண் நகை தோன்றும் என்கிறார் தொல்காப்பியர்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர். ஆனால் இங்கு அகத்தின் அன்பு இல்லாமல் புறத்தில் போலி சிரிப்புடன் பழகும் தன்மையுடையவரின் நட்பைக் காட்டிலும் பத்து மடங்கு பகைவரால் நன்மை கிட்டும். நகை என்பதனுள் பல்வேறுபட்ட உணர்வுகள் அடங்குகின்றன. **(குறள் 817)** தொல்காப்பியர் கூறும் நகையில் வள்ளுவர் கூறும் நகை அடங்காது வள்ளுவர் பொய் மனிதர்களின் நகை உணர்வின் விஷத்தன்மையை வள்ளுவர் பிரதிபலிக்கிறார். இத்தகைய கருத்து நிலைபாட்டில் வள்ளுவரும் தொல்காப்பியரும் தத்தம் கால சூழ்நிலையில் உணர்வைக் கையாண்டு உள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**அழுகை**

“இளிவே இழவே அசைவே வறுமை” என நான்கு வகையில் அழுகை தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். மனிதனின் முக்கிய உணர்வுகளில் ஒன்று அழுகை. இத்தகைய அழுகையில் உணர்ச்சி வெளிப்படும் வகையினை 71 வது குறளில் குறிப்பிடுகிறார். பிறர் மீது உள்ள அன்பினை அடக்கும் தாழ்ப்பாள் ஒன்றும் இல்லை. தம் அன்புடையதாகக் காட்டுவதும் அவ் அன்பை வெளிப்படும் கருவியாக கண்ணீர் திகழ்கிறது. இதனை வள்ளுவர் தலைவனது பிரிவைத் தாங்காத தலைவியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறார். **(குறள் 1172)**

தலைவனைக் கண்டபோது மகிழ்ந்த என் கண்கள் அவரைக் காணாமல் வருந்தி அழுததேன்? எனத் தலைவியின் காதல் உணர்வைத் தக்க சமயத்தில் வெளிப்படுத்துகிறார்.

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கும் பொருள் எந்தளவிற்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறதோ அதே அளவிற்கு பொருள் இல்லாதவரையும் இழிவுப்படுத்துகிறது. வறுமை காரணமாக ஒருவனுக்கு அழுகை தோன்றுகிறது என்கிறார் தொல்காப்பியர். இருப்பினும் பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை எனவும். **‘இல்லாரை எல்லோரும் எள்ளுவர்’** என வறுமை அடைந்தவர்களை இழிவாக பார்க்கும் சமூகம் அவர்களை ஒரு நாயைப் போன்று நடத்துதல் அழுகை உணர்வுக்குச் சான்றாகிறது.

**பசியுணர்வு**

‘பசி’ வந்தால் பத்தும் பறந்து போகும் என்பார் தமிழ் மூதாட்டி ஔவை. இத்தகைய பத்து என்ன என்பதைத் தமது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்**
**கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்.** **(நல்வழி 26 )**

பசி வந்தால் மனிதனையும் சமூகத்தினையும் எப்படி புரட்டிப்போடும் என்பதற்கு இப்பாடல் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். ஔவையார் தொடங்கி தன் ஒரு வரியிலேயே மகாகவி பாரதி, ‘தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம், என்று பசியின் தன்மை அறிந்து உலக சமூகத்தின் மீது தன் கோபத்தைக் காட்டுகிறார். இத்தகைய பசியைப் பற்றி தெய்வப்புலவர் சொல்லாமல் விட்டு இருப்பாரா என்ன? 734 வது குறளில் வள்ளுவர் ‘உறுபசி’ என்கிறார். மிகுந்த பசி என்பது உயிரைக் கொல்லும். ‘பசி, தாகம், காமம் முதலென உடல் சார்ந்த தேவைகள் மதிப்பு, புகழ் ,பதவி போன்றவை சமூகம் சார்ந்த தேவைகள். இந்த இரண்டின் அஸ்திவாரத்தில்தான் மனிதன் என்னும் உயிர் இயங்கிக் கொண்டிருக்கின்றது,[2] என்கிறார் முனைவர் பலராமன்.

பசி என்னும் நோய் மிகப் பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் அத்தகைய பசியுணர்வை எட்டு குறட்பாக்களில் கூறி உலகக்கொடிய நோயான பசி உணர்வின் விளைவுகளைச் சுட்டுகிறார் வள்ளுவர்.

**நட்புணர்வு**

மனித வாழ்வு நட்பின் அங்கமாகவே திகழும்; நட்பில்லாதவர் ஊனமுற்றவர்களாகக் கருதப்படுகிறார். சங்க காலத்தில் மாபெரும் அரசர்களே கற்று அறிந்த புலவர் பெருமக்களுடன்

நட்பு கொண்டிருந்தனர் என்பதை இலக்கியத்தின் வழியாக அறிய முடிகிறது. உதாரணமாகப் பாரி கபிலன் நட்பு, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு, பாண்டிய மன்னன் மாங்குடி மருதனார் நட்பு உள்ளிட்டவை என அடுக்கிக்கொண்டே போகலாம். நட்பு என்பது ஒரு மகத்தான உணர்வு அத்தகைய உணர்வின் வெளிப்பாட்டை வள்ளுவர் குறிப்பிடுவதை இங்கு நாம் உற்றுநோக்க வேண்டும்.

'கூடா நட்பு கேடாய் முடியும்' என்ற பழமொழியை அறிந்திருக்கிறோம். ஆனால், நல்ல நட்பின் உணர்வை நண்பனுக்கு ஓர் ஆபத்து நேர்கையில், மகிழ்ச்சியை மட்டும் பகிர்ந்து கொள்வது நல்ல நட்பல்ல. நண்பனுக்குத் துன்பம் நேர்கையிலும் மானம் காக்கும் கை துணியைப் பிடித்து மானத்தை காக்கின்றதோ அதுபோன்ற நண்பனின் அழிவு காலத்தில் அவனைக் காத்து நிற்றலே நல்ல நட்பாகும். **(குறள் 788)** நட்பு எப்படி அமைதல் வேண்டும் என்பதை ஏழு சீர்களில் அழகுற வெளிப்படுத்துகிறார் வள்ளுவர்.

**காதலுணர்வு**

காதல் இல்லாத உயிரினமே இல்லை எனலாம் காதல் மனித வாழ்வில் ஒரு முக்கியமான உணர்வாகும். தமிழ் இலக்கியம் மட்டுமின்றி மற்ற மொழி இலக்கியத்திலும் காதல் பற்றி சொல்ல தவறவில்லை. இவ்வகையில் திருவள்ளுவர் காமத்துப்பாலில் காதல் உணர்வை இல்லற உணர்வையும் வெளிப்படுத்துகிறார் **(குறள் 1090).**

மது, குடிப்பவர்களுக்கு மட்டும் இன்பம் உண்டாக்கும். ஆனால் காமமோ கண்டவரிடத்து மயக்கத்தை உண்டாக்கும் என்கிறார். தலைவி தலைவனுக்கு விருந்தளிக்க முடியாமல் தவிக்கும் காதல் உணர்வை சங்க இலக்கியத்தில்

**கன்று முண்ணாது கலத்தினும் படாது**
**நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்**
**கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது**
**பசலை உணீஇயர் வேண்டும்**

**திதலை அல்குலென் மாமைக் கவினே.** (குறுந்தொகை 27)

கன்றும் குடிக்காமல் பாத்திரத்திலும் கறவாமல் நிலத்தின் வீணே விழுந்துபோகும் பசுவின் பாலை போல, எனக்கும் உதவாமல் என் தலைவனுக்கும் இல்லாமல் என் அழகும் வீணாகிக் கொண்டிருக்கிறது என்று தலைவி பசலையுற்று காணப்படுகிறாள். இந்த நிலையில் தலைவனை பற்றி தலைவி தன் காதல் உணர்வை வெளிப்படுத்தும் விதமாக அமைகிறது. வள்ளுவர் கூறுகையில், மறவன் பல ஆயுதங்களைக் கண்டு அஞ்சாமல் துணிந்து போர் செய்கின்றான்.

ஆனால் தலைவியின் அங்கமானது அவளை எந்த வகையில் தாக்குகின்றன என்பதை இப்பெண்ணின் நிமிர்ந்த மார்பின் மீது ஈட்ட துகில் (ஆடையானது) என்னைக் காத்ததால், மதயானையின் முகப்போர்வை போன்றது என்கிறார். **(குறள் 1087)** அத்தகைய அழகிய தோற்றத்தை மறந்து ஆடையானது என்னைக் காத்தது என்கிறான் தலைவன். இத்தகைய காதல் உணர்வு சொட்ட சொட்ட வள்ளுவரின் காமத்துப்பால் குறட்பாக்களைப் படிப்போர்க்கும் எய்துவது திண்ணம்.

**முடிவுரை**

தமிழ் ஒரு வெள்ளித்தட்டு அதில் திருக்குறள் ஒரு தங்கக் கனி என்று மேலைநாட்டு அறிஞர்கள் கூறுவது இங்கு நோக்கப்பட வேண்டும். திருக்குறள் என்னும் கடல் மூழ்கி எத்தனை முத்து எடுத்தாலும் முத்தும் குறையாது கடலும் வற்றாது அதுபோல எத்தனை ஆராய்ச்சி நூல்கள் குறள் தொடர்பாக வந்தாலும் அதன் கருத்து குறையாது. வள்ளுவர் எத்தனை கருத்துகளை எழுதினாலும் அதன் அடிப்படை உணர்வை உணரவில்லையேல் உயிரற்றவராக்கப்படுவார். வள்ளுவர் வழி நடப்பதும் வள்ளுவன் வழி வாழ்வதும் வாழ்வியல் சிறப்பு என்பதை உணர (உணர்வு) வேண்டும்.

**அடிக்குறிப்பு**

1 உணர்ச்சி இணையதளம் ப-28

2 முனைவர் க.பலராமன் ப-93

**பார்வை நூல்கள்**


1. சுந்தரமூர்த்தி. இ, பாரதியார் கவிதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-14, பதினைந்தாவது பதிப்பு, 2012
2. சுப்பிரமணியன். ச.வே, சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் தொகுதி – 1, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108.
3. பலராமன். க, குறளியார் சிந்தனைகள் இருசுர் நிலையம், முதல் பதிப்பு 2011
4. எஸ்.ஆர்.கே, திருக்குறள் ஆய்வுரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை -600 098.